# மரண தண்டனையிலிருந்து மகேஸ்வரன் தப்பினார்

(ஆர்.குணா)

கோலாலம்பூர், ஜூன் 12-

கடந்தாண்டு போதைப் பொருள் விநியோகம் செய்ததாக இரண்டு குற்றசாட்டுகளின் பேரில் 32 வயது தனிப்பட்ட உதவியாளர் ஆர்.மகேஸ்வரன் மரண தண்டனை அபாயத்தை எதிர்நோக்கியிருந்தார்.



*மரண தண்டனையிலிருந்து விடுதலை : மகேஸ்வரன் மகிழ்ச்சி*

நேற்று முன்தினம் இங்குள்ள உயர் நீதிமன்றம் இவரை இத்தகைய அபாயத்திலிருந்து விடுதலை செய்தது. வழக்கின் இறுதியில் குற்றம் சாட்டப்பட்ட இந்த நபருக்கு எதிரான ஆதாரங்களை அரசு தரப்பு வழக்கறிஞர் நிரூபிக்க தவறிவிட்டதை முன்னிட்டு நீதி ஆணையர் டத்தோ படுகா அஸ்மான் அப்துல்லா இவரை விடுதலை செய்தார்.

இவர் மீது சுமத்தப்பட்ட முதலாவது குற்றச்சாட்டு நான்கு போதைப் பொருள் பொட்டலங்களை விநியோகம் செய்தது. இரண்டாவது குற்றச்சாட்டு 20 போதைப் பொருள் பொட்டலங்களை விநியோகம் செய்தது. இந்த இரண்டு சம்பவங்களும் ஜாலான் கோவில் பகுதியில் நடந்ததாக தெரிவிக்கப்பட்டது.

அபாயகரமான போதைப்பொருள் சட்டத்தின் கீழ் குற்றஞ்சாட்டப்படும் நபருக்கு மரண தண்டனை வழங்கப்படும் அபாயம் உண்டு.

ஏழு பேர் இவ்வழக்கில் சாட்சியமளித்தனர். மரண தண்டனையிலிருந்து விடுதலையாகிய மகேஸ்வரன் மகிழ்ச்சியுடன் தன் வழக்கறிஞருடன் உரையாடினார்.